ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருத்தாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருத்தாய் ॥

## பறவைகளை நோக்கி மாயனை அழைக்க எனல்

‡திருத்தாய் செம்போத்தே!⋆
திருமா மகள் தன் கணவன்⋆
மருத்தார் தொல் புகழ்⋆ மாதவனை வரத்⋆
திருத்தாய் செம்போத்தே! (1)

கரையாய் காக்கைப் பிள்ளாய்⋆
கரு மா முகில் போல் நிறத்தன்⋆
உரையார் தொல் புகழ்⋆ உத்தமனை வரத்⋆
கரையாய் காக்கைப் பிள்ளாய்! (2)

கூவாய் பூங்குயிலே⋆
குளிர் மாரி தடுத்துகந்த⋆
மாவாய் கீண்ட⋆ மணி வண்ணனை வரத்⋆
கூவாய் பூங்குயிலே! (3)

கொட்டாய் பல்லிக் குட்டி⋆
குடம் ஆடி உலகளந்த⋆
மட்டார் பூங்குழல்⋆ மாதவனை வரத்⋆
கொட்டாய் பல்லிக் குட்டி! (4)

சொல்லாய் பைங்கிளியே⋆
சுடராழி வலன் உயர்த்த⋆
மல்லார் தோள்⋆ வட வேங்கடவன் வர⋆
சொல்லாய் பைங்கிளியே! (5)

கோழி கூவென்னுமால்⋆
தோழி! நானென் செய்கேன்⋆
ஆழி வண்ணர்⋆ வரும் பொழுதாயிற்று⋆
கோழி கூவென்னுமால் (6)

காமற்கென் கடவேன்⋆
கரு மாமுகில் வண்ணற்கல்லால்⋆
பூமேல் ஐங்கணை⋆ கோத்துப் புகுந்தெய்ய⋆
காமற்கென் கடவேன் (7)

இங்கே போதுங்கொலோ⋆
இன வேல் நெடுங்கண் களிப்ப⋆
கொங்கார் சோலைக்⋆ குடந்தைக் கிடந்த மால்⋆
இங்கே போதுங்கொலோ (8)

இன்னார் என்றறியேன்⋆
அன்னே! ஆழியொடும்⋆
பொன்னார் சார்ங்கம் உடைய அடிகளை⋆
இன்னார் என்றறியேன் (9)

‡தொண்டீர்! பாடுமினோ⋆
சுரும்பார் பொழில் மங்கையர் கோன்⋆
ஒண் தார் வேல் கலியன் ஒலி மாலைகள்⋆
தொண்டீர்! பாடுமினோ (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥